பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையே கைச்சாத்திடப்பட்ட 2018 யூலை 25 ஆம் திகதிய 6228 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மாகாணங்களுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சாக உள்ளதுடன் ஒன்பது மாகாண கல்வி அமைச்சுக்கள் இச்செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. பொதுக் கல்வி முறைமையின் தரத்தை மேம்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 15,505 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் ஆக உள்ளதுடன் ஐடிஏ ஆல் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.
செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஆகஸ்ட் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்திசெய்தல் திகதி 2025 யூன் 30 வரை நீடிக்கப்பட்டது.

1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள்	இணக்கமின்மை / கணக்காய்வு விடயம்	முகாமைத்துவத்தின் பதில்	கணக்காய்வாளரின் பரிந்துரை
(அ)	இலங்கை நிதிப்பிரமானங்கள் 626	கூறப்பட்ட செயற்திட்டத்திற்காக செலவு பேரேட்டிற்கு மேலதிகமாக இரட்டைப்பதிவு முறைமையின் கீழ் தனியான புத்தகங்கள் பேணப்பட வேண்டியிருந்தும், வட மேல் மாகாண செயற்திட்டத்தின் கணக்குகளை பேணுகையில் அவ் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.	கருத்துரைகள் கிடைக்கப்பெறவில்லை.	நிதிக்கூற்றுக்களானது பொருத்தமான நிதி சட்டகத்துடன் இணங்க வேண்டும்.
(ஆ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் - எஸ்எல்பிஏஎஸ் 01	கணக்கீட்டு அடிப்படைக்கான குறிப்பின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களானது முடிந்தளவு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்படல் வேண்டும் என கூறப்பட்டிருந்தது. இருப்பினும், நிதிக்கூற்றுக்களானது காசு அடிப்படையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்தது.	கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதுடன் எதிர்கால நிதிக்கூற்றுக்களில் சரிசெய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.	எஸ்எல்பிஏஎஸ் உடன் இணங்குக.

3. பௌதீக முன்னேற்றம்

3.1 செயற்திட்ட பௌதீக முன்னேற்றம்

தாமதம்/கணக்காய்வு விடயங்கள்	முகாமைத்துவத்தின் பதில்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
வடமேல் மாகான சபையானது பொதுக்கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் 2020 தொடக்கம் 2024 திசெம்பர் 31 வரை ரூபா 1,699 மில்லியனினை ஒதுக்கீடு செய்திருந்ததுடன் ரூபா 1,387 மில்லியன் செலவலிக்கப்பட்டுமிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. (i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஆங்கிலம் மற்றும் கணிதத்துடன் தொடர்புபட்ட பெறுபேறுகளின் பகுப்பாய்வில் 08 பிராந்தியங்களில் பெறுபேறுகளில் ஓர் குறைவு அவதானிக்கப்பட்டிருந்தது. (ii) இவ் 02 பாடங்களினதும் ஒப்பீட்டு வளர்சியானது மிகவும் குறைவாக காணப்படுகின்றமை மற்றும் கடந்த 5 வருடங்களை கருத்தில் கொள்ளும் போது 2023 இன் பெறுபேறுகள் ஒட்டுமொத்தமாக வீழ்ச்சியடைந்திருந்தமை போன்றன காரணமாக செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் அடையப்பட்டிராமை அவதானிக்கப்பட்டிருந்தது. (iii) 2019-2023 ஆண்டுகளிற்கான பெறுபேறுகளின் பகுப்பாய்வில், வடமேல் மாகாணத்திலுள்ள 8 பிராந்தியங்களுக்கிடையே கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் புத்தளம் பிராந்தியமானது குறைந்த சித்தி சதவீதத்தினை பதிவிட்டிருந்தது.	கருத்துரைகள் கிடைக்கப்பெறவில்லை.	திட்டமிட்ட படி செயற்திட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.2 செயற்திட்ட செயற்பாடுகளின் ஒதுக்கீட்டு இணைப்பு குறிகாட்டிகளின் செயலாற்றல்

	டிஎல்ஐ இல.	கணக்காய்வு விடயங்கள்	முகாமைத்துவத்தின் பதில்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	**டிஎல்ஐ 01**	மாணவர்களின் ஆங்கில கற்றல் அடைவு மட்டத்தினை மேம்படுத்தலானது இவ் ஒதுக்கீட்டு இணைப்பு குறிகாட்டியின் குறிக்கோளாக இருந்ததுடன் தென் மாகாணத்திற்குள் 55 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு அதனடிப்படையில் 14 நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டிருந்தன. செயற்திட்ட செயற்பாட்டு கைநூலின் பிரிவு 9 இன் பிரகாரம், 2024 ஆம் ஆண்டு முடிவில் மாணவர்களின் ஆங்கில கற்றல் அடைவு மட்டத்தினை மேம்படுத்துவதில் 80 சதவீதமான திட்டமிடப்பட்ட பெறுபேறானது எதிர்பார்க்கப்பட்டிருந்தது. கணக்காய்வு பரீட்சிப்பின் பிரகாரம் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் இவ் வருடாந்த மதிப்பீடானது செய்யப்பட்டிருந்தது, மேலும், முன்னும் பின்னும் நடைபெற்ற இரண்டு பரீட்சைகளில் முன்பு நடந்த பரீட்சையில் தோற்றியிருந்த மாணவர்கள் பின்னர் நடந்த பரீட்சையில் தோற்றியிருக்கவில்லை. அதனால் மாணவர்களின் ஆங்கில கற்றல் அடைவு மட்டமானது இதனூடாக மேம்படுத்தப்பட்டதா என்பதனை சரியாக உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது.	கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொண்டனர்.	எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டங்கள் ஒவ்வொரு டிஎல்ஐ ஊடாகவும் அடையப்படல் வேண்டும்.
(ஆ)	**டிஎல்ஐ 02**	மேம்படுத்தப்பட்ட ஆங்கில கற்றல் அடைவு மட்டங்களானது தென் மாகாணத்திலுள்ள 38 பாடசாலைகளை தெரிவு செய்வதனூடாக அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட செயற்பாட்டு கைநூலின் பிரிவு 9 இன் பிரகாரம், 2024 ஆம் ஆண்டு முடிவில் மாணவர்களின் கணித	கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொண்டனர்.	எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டங்கள் ஒவ்வொரு டிஎல்ஐ ஊடாகவும் அடையப்படல் வேண்டும்.

		பாடத்திற்காக 80 சதவீதமான திட்டமிடப்பட்ட பெறுபேறானது எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதன் மீதான கணக்காய்வு பரீட்சிப்பின் பிரகாரம், 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் கணித பரீட்சையானது பல்வேறு பாடசாலைகளில் நடாத்தப்பட்டிருந்தும், அவைகள் வருடாந்தம் முன்னரும் பின்னரும் நடாத்தப்படாததனால், அப் பரீட்சைகளின் பெறுபேறுகளினூடாக கணித அறிவின் மீது ஓர் சரியான மதிப்பீட்டினை செய்ய முடியாமலிருந்தமை அவதானிக்கப்பட்டது.		
(இ)	**டிஎல்ஜ 03**	தொடர்புடைய தொழிநுட்ப கருவிகள் மற்றும் தொடர்புடைய கணினி நிகழ்ச்சித்திட்டங்கள், வலைத்தளங்கள், சீடீக்கள், டீவீடீகள் போன்றனவற்றை வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது ஓர் கூட்டு மொத்தம் ரூபா 9 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும், 2021 ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரை இவ் ஒதுக்கீட்டு இணைப்பு குறிகாட்டியிற்காக ஏற்பட்ட உண்மையான செலவீடானது கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொண்டனர்.	எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டங்கள் ஒவ்வொரு டிஎல்ஜ ஊடாகவும் அடையப்படல் வேண்டும்.
(ஈ)	**டிஎல்ஜ 04**	செயற்திட்ட செயற்பாட்டு கைநூலின் பிரிவு 9 இல் உள்ளடக்கப்பட்ட அபிவிருத்தி குறிக்கோள் குறிகாட்டியின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது ஆசிரியர் அறிவில் மேம்பாடு, கற்பித்தல் திறன்கள், ஆசிரியர் உந்துதல் அல்லது வகுப்பறை முகாமைத்துவ திறன்கள் என்பன கணித மற்றும் ஆங்கில பாட ஆசிரியர்களில் ஆகக் குறைந்தது 75 சதவீதமானோரில் எதிர்பார்க்கப்பட்டது. அதற்காக திட்டமிடப்பட்ட 06	கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொண்டனர்.	எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டங்கள் ஒவ்வொரு டிஎல்ஜ ஊடாகவும் அடையப்படல் வேண்டும்.

	செயற்பாடுகளில் 04 இற்காக கூட்டு மொத்தம் ரூபா 6.1 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும், ஆசிரியர்களின் ஆசிரிய அபிவிருத்தியின் மேம்பாட்டிற்காக எவ்வித பங்களிப்புகளும் அதன்மீது செய்யப்பட்டிராமை அதன் செயற்பாடுகள் மீது செய்யப்பட்ட கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

3.3 வெளிக்கள விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்பு

	கணக்காய்வு விடயங்கள்	முகாமைத்துவத்தின் பதில்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	செயற்திட்ட செயற்பாட்டு கைநூலின் பிரிவு 9 இன் பிரகாரம், மேம்படுத்தப்பட்ட கணித மற்றும் ஆங்கில கற்றல் அடைவு மட்டங்கற்காக டிஜிடல் உபகரணங்கள் (மின்னனுப் பலகைகள்) பாடசாலைகளிற்கு வழங்கப்பட்டிருந்தும், தென் மாகாணத்திலுள்ள மாணவர்களிற்கு பாடத்திட்டம் மற்றும் கல்வி வலைத்தளங்கள் என்பனவற்றுடன் சீடீக்கள், டீவீடீகள் போன்றனவற்றை வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால், கூறப்பட்ட டிஜிடல் உபகரணங்களானது முறையாக பயன்படுத்த முடியாமலிருந்தமை அவதானிக்கப்பட்டது.	கூறப்பட்ட செயற்பாடானது கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பொறுப்பு என மாகாணம் தெரிவித்திருந்தது அனால் மாகாணங்கள் எதிர்பார்த்தபடி எவ்வித டிஜிடல் முறையில் இயக்கப்பட்ட புத்தகங்களையும் பெற்றுக்கொள்ளவில்லை.	அனைத்து செயன்முறைகளும் செயற்பாட்டு கைநூலுடன் இணங்க வேண்டும்.
(ஆ)	2024 இல், மொத்தம் 192,673,826 சாதனங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வட மத்திய மாகாணத்திலுள்ள பாடசாலைகள் மற்றும் கல்வி வள நிலையங்கள் என்பனவற்றிற்கு வினியோகிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், சில காரணங்களினால் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் அடையப்பட்டிருக்கவில்லை, மேலும் சில சாதனங்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளன.	தொடர்புடைய நிறுவல் வேலை பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.	செயற்திட்ட சொத்துக்கள் வினைத்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும்.
(இ)	வட மேல் மாகாணத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 560 மில்லியன் ஏற்பாட்டில், 31 கட்டிட நிர்மானங்கள்,		

பராமரிப்பு மற்றும் புனரமைப்பு செயற்திட்டங்கள் போன்றனவற்றிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 54 மில்லியன் செலவினம் ஏற்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. (i) ரூபா 4,071,847 பெறுமதியிலான, இப்பாகமுவ கும்புக்வேவ மகா வித்தியாலயம் மற்றும் மெடமுல்ல டி மெல் மகா வித்தியாலயம் என்பனவற்றிலான கணித செயற்பாட்டு அறைகள் மற்றும் ஆங்கில செயற்பாட்டு அறைகள் என்பனவற்றின் நிர்மானமானது 2025 மே 23 கணக்காய்வுத் திகதியில் உள்ளவாறு இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. (ii) மேற்கூறப்பட்ட செயற்பாட்டு அறைகளிற்காக ரூபா 2,820,684 பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தும், அவைகள் பயன்படுத்தப்படாமல் இருந்தன. (iii) லக்தாஸ் டி மெல் மகா வித்தியாலயம் மற்றும் டி.பீ.விஜேசூரிய மகா வித்தியாலயம் என்பனவற்றில், ரூபா 4,875,973 கிரயத்தில் புனரமைக்கப்பட்ட ஸ்மார்ட் வகுப்பறைகளானது 2025 மே 23 கணக்காய்வுத் திகதியில் கூட திறந்துவைக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோல், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்ட ரூபா 11,041,232 பெறுமதியான தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன பயன்படுத்தப்படாமல் இருந்தன.	கருத்துரைகள் கிடைக்கப்பெறவில்லை.	நிதிகள் வினைத்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும்.

3.4 வழமைக்கு மாறான செயற்பாடுகள்/செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்

	கணக்காய்வு விடயங்கள்	முகாமைத்துவத்தின் பதில்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	ஒட்டுமொத்த செலவினத்தில் 35 சதவீதமானவை புதிய நிர்மானங்கள், பராமரிப்பு மற்றும் புனரமைப்புக்கள் என்பனவற்றிற்காக செய்யப்படலாம் என்றாலும், ஒட்டுமொத்த செலவினத்தில் 38.54 சதவீதமானவை பாடசாலை கட்டிடங்கள் மற்றும் பக்கச் சுவர்ளின் திருத்தங்களிற்காக ஏற்படுத்தப்பட்டிருந்ததே தவிர, விசேட ஆங்கிலம் அல்லது கணித வகுப்பறைகளை உருவாக்குவதற்காக அல்ல, இதுவே செயற்திட்டத்தின் நோக்கமாகும்.	செய்யப்பட்ட அனைத்து செலவினங்களும் நேரடியானவோ அல்லது மறைமுகமாகவோ செயற்திட்ட நோக்கங்களுடன் தொடர்புபட்டதாகும்.	செயற்திட்ட நோக்கங்களின் பிரகாரம் நிதிகள் பயன்படுத்தப்படல் வேண்டும்.
(ஆ)	கல்வித் திணைக்களம் - தென் மாகாணம் இன் திட்டமிடல் பிரிவின் புனரமைப்பு மற்றும் கூறப்பட்ட பிரிவிற்கான தளபாடம் மற்றும் உபகரண கொள்வனவு என்பவற்றிற்காக மொத்தம் ரூபா 2,616,572 GEM செயற்திட்டத்தினால் செய்யப்பட்டிருந்தது.	கல்வி அமைச்சின் அனுமதி மற்றும் AIP மூலமான WB உடன்படிக்கை என்பனவற்றுடன் அது பலப்படுத்தப்பட்டுள்ளது.	செயற்திட்ட நோக்கங்களின் பிரகாரம் நிதிகள் பயன்படுத்தப்படல் வேண்டும்.
(இ)	நாமல் அங்க வித்தியாலயத்தில், ஆலோசனை பிரிவின் மீது ரூபா 2,475,606 ஆன ஓர் செலவினம் ஏற்பட்டிருந்தது, அது செயற்திட்டத்தின் பிரதான நோக்கத்திற்கு நேரடியான பங்களிப்பினை செய்திருக்கவில்லை. போதுமானளவு இருப்பு உருப்படிகள் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் போது, ரூபா 615,140 பெறுமதியான மேலதிக தளபாடம் மற்றும் உபகரணங்கள் கூட வழங்கப்பட்டிருந்தது.	கருத்துரைகள் கிடைக்கப்பெறவில்லை.	செயற்திட்ட நோக்கங்களின் பிரகாரம் நிதிகள் பயன்படுத்தப்படல் வேண்டும்.
(ஈ)	2022 இல், ஞானோதயா மத்திய கல்லூரியின் விசேட கல்விப் பிரிவானது ரூபா 4,444,879 கிரயத்தில் புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது, ரூபா 985,306 பெறுமதியான தளபாடம்	கருத்துரைகள் கிடைக்கப்பெறவில்லை.	செயற்திட்ட நோக்கங்களின் பிரகாரம் நிதிகள் பயன்படுத்தப்படல் வேண்டும்.

	மற்றும் உபகரணங்கள் கூட இச் செயற்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்தது, இது செயற்திட்டத்தின் உரிய நோக்கத்திற்கு அப்பால் கானப்பட்டது. அதற்கு மேலதிகமாக, மேற்கூறப்பட்ட பிரிவானது அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக கூட புனரமைக்கப்பட்டிருந்தது.		

3.5 விளைவற்ற/குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

	கணக்காய்வு விடயங்கள்	முகாமைத்துவத்தின் பதில்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	தென் மாகாணத்தில் இச் செயற்திட்டத்திற்கான ஆரம்ப ஒதுக்கீடு ரூபா 475 மில்லியனில் 15 சதவீதமான ரூபா 69 மில்லியனானது மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு விளைவற்று காணப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	இத் தொகை தற்போது பயனளிக்கும் வகையில் பயன்படுத்தப்படுகின்றது என மாகாணம் தெரிவித்துள்ளது.	நிதிகள் வினைத்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும்.
(ஆ)	மத்திய மாகாணத்திலுள்ள கலாவெல மற்றும் ஹங்குராங்கெத்த பகுதிகளிற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடு ரூபா 8,694,530 இல் 23 சதவீதமான ரூபா 1,963,496 ஆனது மீளாய்வாண்டில் உள்ளவாறு உரிய நோக்கத்திற்கு செலவிடப்படாது காணப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2023 இல் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 230,216 பெறுமதியான கணிதவியல் உபகரணங்கள் உரிய பாடசாலைகளிற்கு வழங்கப்படாமல் 2024 நவம்பர் 30 இல் உள்ளவாறு தெல்தெனிய மற்றும் கொத்மலே போன்ற வலையக் கல்வி அலுவலகங்களின் களஞ்சிய அறைகளில் இன்னும் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.	இச் செயற்பாடுகள் தற்போது முழுமையாக செயற்படுத்தப்பட்டு ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.	நிதிகள் வினைத்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும்.
(இ)	தென் மாகாணத்தில் கணிதவியல் கற்றல் தொகுப்புக்கள், நுண் பலகைகள் மற்றும் கணினிகள் என்பனவற்றிற்காக மீளாய்வாண்டில் கூட்டு மொத்தம் ரூபா 12.63 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தும், ஆங்கிலம் மற்றும் கணித கற்றல் அடைவு மட்டங்கள் மேம்படுத்தப்படும் வகையில் இவ் உபகரணங்களானது சில	எதிர்காலத்தில் இந் நிலமையினைத் தவிர்க்க உரிய தரப்பினர்களிற்கு தேவையான விழிப்புனர்வு வழங்கப்படும் என மாகாணம் தெரிவித்துள்ளது.	செயற்திட்ட சொத்துக்கள் வினைத்திறனான முறையில் பயன்படுத்தப்படல் வேண்டும்.

பாடசாலைகளில் பயன்படுத்தப்பட்டிறாததுடன், அவைகள் சில பாடசாலைகளில் விளைவற்றதாகவும் காணப்பட்டமை கணக்காய்வு பரீட்சிப்பின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.